சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 166/2020

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சடையாண்டி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| கிராமம் | ஆரணி | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

08.11.2022 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக 21.08.2019 தேதியிட்ட அசல் கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ.1, 16.06.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2, அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.